களப்பாகுளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் முன்னிலை

திருமதி. வே. சிவசங்கரி

ந.க.எண் : 2/2024-25 நாள் : 14.09.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - தென்காசி மாவட்டம் - சங்கரன்கோவில் ஊராட்சி - ஒன்றியம் - களப்பாகுளம் ஊராட்சி - S.No. 84/5B, 84/6B குடியிருப்பு மனைப்பிரிவுதிட்ட அனுமதி மற்றும் D.T.C.P தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது தொடர்பாக.

பார்வை :

1. அரசு ஆணை (நிலை) எண்: 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 16.08.2003
2. அரசு ஆணை (நிலை) எண்: 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 16.08.2003
3. இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் அலுவலக கடித ந.க.எண்:
   REF22666/2024/TCP/2024/TCP 20.05.2024

*****

உத்தரவு:

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், களப்பாகுளம் ஊராட்சி சர்வே எண்: 84/5B, 84/6B-ல் 5950 Sq.Metre பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி மனை பிரிவு எண்: மா.வ/தெ.மா.நா.ஊ.அ.எண்: SWP/18/2024 என்ற எண்ணில் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைபிரிவு 5950 (1.47 ஏக்கர்) சதுரமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 27 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மனைபிரிவில் 1626.92 ச.மீ பரப்பளவில் சாலைகளும் உள்ளாட்சி (பஞ்சாயத்து) 23.37 ச.மீ ஊராட்சி (TANGEDCO) வகைக்காக 23.65 ச.மீ ஆக மொத்தம் 1673.94 ச.மீ ஒதுக்கப்பட்டு ஆவண எண்:1161/2024 நாள்: 25.04.2024 தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைபிரிவிற்கு கீழ்கண்ட விவரப்படி மனைபிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டு உள்ளது. களப்பாகுளம் ஊராட்சிக்கு மனைபிரிவு கட்டணமாக மொத்தப்பரப்பளவு சதுரமீட்டரில் மேற்குறிப்பிட்ட தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கான 1673.94 ச.மீ போக எஞ்சி உள்ள 4276.06 சதுரமீட்டரில் 27 மனைகளுக்கு தொகை ரூ.27,000/- (இருபத்து ஏழு ஆயிரம்) ஊராட்சி நிதியில் இந்தியன் வங்கி கிளை களப்பாகுளம் V.P. 230823 கணக்கு எண்: 7388531417 நாள் : 12.09.2024-ல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நகர ஊரமைப்பு நிபந்தனைகள் 4-ல் கண்டபடி நிலவகைப்பாடு (Land Conversation) வகைக்காக தமிழக அரசு நில வழிகாட்டி மதிப்பின் படி ரூ.13,275-ஐ இந்தியன் வங்கி கிளை களப்பாகுளம் V.P. 230823 கணக்கு எண்: 7388531417 நாள் : 12.09.2024-ல் செலுத்தப்பட்டுள்ளது.

மனை எண்கள்	மனை அளவு சதுர மீட்டர்	ஊராட்சிக்கு செலுத்தப்பட்ட வளர்ச்சி நிலவகைப்பாடு கட்டணம்
மனைகள் 27	மனைகளின் பரப்பளவு 4276.06 ச.மீ மொத்த பரப்பளவு 5950 (1.47 ஏக்கர்)	27 * 1000 = 27,000/- 442470 * 3 % = 13,275/-

எனவே பின்வரும் நிபந்தனைகளடன் இக்குடியிருப்பு மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் அலுவலக கடித மா.வ/தெ.மா.நா.ஊ.அ.எண்: SWP/18/2024 நாள்: 20.05.2024 படி குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.
2. மனைபிரிவுக்கு கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.
3. நீதிமன்ற வழக்கு வேறு ஏதேனும் வில்லங்கம் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.
4. ஓடை தண்ணீர் மனைக்குள் பாயும் பட்சத்தில் அதனை அகற்றும் பொறுப்பு சம்பந்தப்பட்ட மனுதாரரை சாரும். உள்ளாட்சி பொறுப்பு அல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

V. Sivasu 14/9/24.

தலைவர்
ஊராட்சி மன்றம்
களப்பாகுளம்